# தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாததற்கான காரணங்கள் - 12

1. தமிழ்நாடு 1968ம் ஆண்டு முதல், முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய இரு மொழிக் கொள்கையை பின்பற்றி வருகிறது. உலகின் பழமையான உயிர்ப்புள்ள மொழிகளில் ஒன்றான தமிழை, தமிழ்நாட்டின் பண்பாட்டு அடையாளத்தின் மையமாக பாதுகாக்க இது உறுதி பூண்டுள்ளது. மூன்றாவது மொழியை திணிப்பது இந்த பாரம்பரியத்தை பலவீனப்படுத்தும் அபாயத்தை ஏற்படுத்துகிறது.

2. தமிழ்நாட்டின் இரு மொழிக் கொள்கை, பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் உயர் படிப்பறிவு விகிதத்தையும் கல்வி சாதனைகளையும் அளித்துள்ளது. தமிழை தாய் மொழியாகவும், ஆங்கிலத்தை உலக இணைப்பு மொழியாகவும் மையப்படுத்தி, உள்ளூர் தேவைகளுக்கும் சர்வதேச போட்டித்திறனுக்கும் இடையே சமநிலையை ஏற்படுத்தியுள்ளது. இது மாணவர்களை மூன்றாவது மொழியால் அலைக்கழிக்காமல், கடந்த 50 ஆண்டு களாக சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை தந்துள்ளது.

3. இந்திய அரசியலமைப்பின் ஒருங்கிணைந்த பட்டியலின் கீழ் கல்வி உள்ளது. இது மாநிலங்களுக்கு அவற்றின் தனித்துவமான மொழி மற்றும் பண்பாட்டு சூழலுக்கு ஏற்ப கொள்கைகளை வடிவமைக்க உரிமை அளிக்கிறது. மூன்று மொழிக் கொள்கையை நிராகரிப்பது இந்த கூட்டாட்சி கொள்கையுடன் ஒத்துப்போகிறது. மூன்றாவது மொழியை திணிப்பது இந்த அரசியலமைப்பு சட்டத்தையும் மாநில உரிமையையும் மீறுகிறது.

4. மூன்று மொழிக் கொள்கை தமிழ்நாட்டில் இந்தியை திணிக்கும் மறைமுக முயற்சியாக பார்க்கப்படுகிறது. 1937 மற்றும் 1965ம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டங் களில் வேரூன்றிய இந்த கவலை, தமிழ் அடை யாளத்திற்கு எதிரான அத்துமீறலாக உள்ளது. இதை தமிழ்நாட்டுத் தலைவர்கள் உறுதியாக எதிர்த்தனர்.

5. மூன்றாவது மொழியை அறிமுகப்படுத்துவது, இந்தி தவிர பிற மொழிகளுக்கு தகுதியான ஆசிரியர்கள் பற்றாக்குறை உள்ளிட்ட நடைமுறை சிக்கல்களை உருவாக்கும். இது மாணவர்களை இந்தியை கற்க வற்புறுத்தலாம். இது தேசிய கல்வி கொள்கை தேர்வு உரிமையை மீறும். இரு மொழி முறையோ, ஏற்கனவே உள்ள வலுவான உள்கட்டமைப்புடன் நன்கு நிறுவப்பட்டுள்ளது.

6. ஆரம்ப காலத்தில் குறைவான மொழிகளை கற்பது மாணவர்களுக்கு பயனளிக்கும் என ஆராய்ச்சி கூறுகிறது. தமிழ்நாட்டின் கொள்கை, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தேர்ச்சியை உறுதி செய்கிறது. இது உள்ளூர் மற்றும் உலகளாவிய தேவைகளுக்கு போதுமானது. மூன்று மொழிகளை திணிக்காமல் மாணவர்களின் மன அழுத்தத்தை தவிர்க்கிறது.

7. தமிழ்நாடு இந்தி போன்ற மொழிகளை கற்பதை தடை செய்யவில்லை. பாடத்திட்டத்திற்கு வெளியே தன்னார்வ கற்றலை ஊக்குவிக்கிறது. தக்ஷிண பாரத் இந்தி பிரசார் சபா போன்ற நிறுவனங்கள் மாநிலத்தில் செழித்து வளர்கின்றன. கட்டாயம் தேவையில்லை என்பதை இது நிரூபிக்கிறது.

8. அறிஞர் அண்ணா, பன்மொழி சமூகமான இந்தியாவில், அதிகாரப்பூர்வ மொழி அனைத்து மொழி குழுக்களுக்கும் சம தூரத்தில் இருக்க வேண்டும் என வாதிட்டார். ஆங்கிலம் இதை திறம்பட செய்கிறது, ஆனால் மூன்றாவது மொழி (பெரும்பாலும் இந்தி) ஒரு மொழி குழுவை ஆதரிக்கும் அபாயத்தை உருவாக்குகிறது.

9. 1976ம் ஆண்டு அதிகாரப்பூர்வ மொழிகள் விதி 1(ii) படி, தமிழ்நாடு 1963ம் ஆண்டு அதிகாரப்பூர்வ மொழிகள் சட்டத்திலிருந்து விலக்கு பெற்றுள்ளது. இது மாநிலத்தின் தனித்துவமான மொழி நிலைப்பாட்டை மதிக்கிறது, அதை தேசிய கல்வி கொள்கை மீறக்கூடாது.

10. தி.மு.க., அ.தி.மு.க. உள்ளிட்ட தமிழ்நாட்டின் அனைத்து முக்கிய அரசியல் கட்சிகளும் இரு மொழிக் கொள்கையை ஆதரிக்கின்றன. எட்டு தசாப்தங்களாக மக்கள் போராட்டங்கள் மற்றும் ஜனநாயக வெளிப்பாடு கள் மூலம் இதை உறுதிப்படுத்தியுள்ளனர். இதை புறக்கணிப்பது மக்களை புண்படுத்தும்.

11. மூன்றாவது மொழி இல்லாதது வாய்ப்புகளைகட்டுப்படுத்துவதாகவிமர்சிக்கப்பட்டாலும், தமிழ்நாட்டு மாணவர்கள் மற்றும் தொழில்முறை யாளர்கள் தேசிய மற்றும் உலகளாவிய அளவில் சிறப்பாக உள்ளனர். மாநிலத்தின் பொருளாதாரம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் புலம்பெயர் வெற்றி இதை நிரூபிக்கிறது.

12. நிதி அழுத்தம் அல்லது கொள்கை திணிப்புக்கு பதிலாக, தமிழ்நாடு கூட்டாட்சி ஒத்துழைப்பை விரும்புகிறது. தமிழ்நாட்டின் வெற்றிகரமான இரு மொழி மாதிரியை மதிக்க வேண்டும். ஒருமைப்பாட்டை விட பன்முகத்தன்மையை ஊக்குவிக்க வேண்டும். இந்த புள்ளிகள், தமிழ்நாட்டின் வரலாற்று உறுதிப்பாடு, நடைமுறை சாதனைகள் மற்றும் அரசியலமைப்பு உரிமைகளை வலியுறுத்தி, இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பிற்குள் பரஸ்பர மரியாதையை வேண்டுகிறது.



கழக விவசாயத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் தாட்கோ தலைவர் உ.மதிவாணன் தலைமையில் நடைபெற்றது. அணியின் செயலாளர் அன்னியூர் சிவா எம்.எல்.ஏ., முதல்வர் அவர்களின் பிறந்த நாளை திருச்சியில் மிகப் பிரம்மாண்டமாக நடத்திடவும், அனைத்து மாவட்டங்களிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடுவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்களை விளக்கி உரையாற்றினார். இதில் புதுக்கோட்டை சந்திரசேகர், சி.ஆர்.ராமச்சந்திரன், ராஜசேகரன், எஸ்.சேதுராமன், ந.ஆனந்த், ஜெய வீரபாண்டியன், செய்யாறு அன்பழகன், அருண்குமார், கே.ஆர்.என்.போஸ், கைலாசம், திருவாரூர் சங்கர், கொடி சந்திரசேகர், கணேஷ் ஆதித்தன் உள்ளிட்ட மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. வழக்கறிஞர் அணி

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ அறிவிப்பு!

தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (24-02-2025 - திங்கட்கிழமை) மாலை 5.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள “தி.மு.க. சட்டத்துறை அலுவலகத்தில்” எனது தலைமையில், சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் துணைச் செயலாளர்கள் தலைமைக் கழக வழக்கறிஞர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 21.02.2025

**என்.ஆர்.இளங்கோ எம்.பி.,**
செயலாளர்,
தி.மு.க. சட்டத்துறை

## குறைந்த விலையில் மருந்துகளை விற்கும் ‘முதல்வர் மருந்தகங்கள்!’

# அனைத்து இடங்களிலும் திறக்கப்படுவது மக்களுக்கு நல்ல பலனை அளிக்கும்!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

*சென்னை, பிப். 23-*

குறைந்த விலையில் மருந்துகளை விற்கும் “முதல்வர் மருந்தகங்கள்” கிராமங்கள் உள்பட அனைத்து இடங்களிலும் திறக்கப்படுவது மக்களுக்கு நல்ல பலனை அளிக்கும் என ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-



தலையங்கம்
தினத்தந்தி
22.2.2025 (சனிக்கிழமை)
குறைந்த விலையில் மருந்துகள் வாங்கலாம்

மக்களின் அன்றாட செலவுகளில், மருத்துவத்துக்காக அதிக தொகை செலவாகிறது. ஏழை-எளிய, நடுத்தர குடும்பங்களின் மருத்துவ செலவை குறைக்க மத்திய அரசின் சார்பில் கடந்த 2008-ம் ஆண்டு பிரதமரின் ‘ஜன்அவுஷாதி பரியோஜனா’ என்ற மலிவு விலை மருந்தகங்கள் திறக்கப்பட்டன. ‘ஜெனரிக்’ மருந்துகளை 50 முதல் 90 சதவீத தள்ளுபடி விலையில் வாங்கிக்கொள்ளும் வகையில் இந்த மருந்தகங்கள் நாடு முழுவதும் இயங்குகின்றன. ‘ஜெனரிக்’ மருந்துகள் என்பது சாதாரண மருந்து கடைகளில் விற்கப்படும் மருந்துகளில் இருக்கும் மூலக்கூறுகளையே கொண்டதாகும். ஆனால் அந்த மருந்துகளுக்கு ஒரு பிராண்ட் (கம்பெனி) பெயர்கள் உண்டு.

பிரபல மருந்து கம்பெனிகளால் தயாரிக்கப்படும் அந்த மருந்துகள் நன்றாக ‘பேக்’ செய்யப்பட்டிருக்கும். அதன் உறைகள், பாட்டில்களில் நிறுவனத்தின் பெயர், அதில் என்னென்ன மருந்து பொருட்கள் எவ்வளவு அளவில் சேர்க்கப்பட்டு இருக்கிறது? தயாரிக்கப்பட்ட தேதி, காலாவதியாகும் தேதி என்று எல்லா விவரங்களும் குறிப்பிடப்பட்டிருக்கும். இதனால்தான் அதற்கு விலை அதிகம். நாடு முழுவதும் மத்திய அரசின் மலிவு விலை மருந்தகங்கள் 15,057 செயல்பாட்டில் உள்ள நிலையில், தமிழ்நாட்டில் மட்டும் 1,363 இருக்கிறது. இதற்கு மக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது.

கடந்த சுதந்திர தினத்தன்று தேசிய கொடியேற்றி வைத்து முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசும் போது, “பொதுப்பெயர் வகை (ஜெனரிக்) அவர்கள் மருந்துகளும், பிற மருந்துகளும் நடுத்தர மக்களுக்கு கிடைக்க செய்யும் வகையில் முதல்வர் மருந்தகம் என்ற புதிய திட்டத்தை அரசு செயல்படுத்தும். முதல் கட்டமாக ஆயிரம் முதல்வர் மருந்தகங்கள் திறக்கப்படும். இந்த திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த மருந்தாளுனர்களுக்கும், கூட்டுறவு அமைப்புகளுக்கும் தேவையான கடனுதவியோடு ரூ.3 லட்சம் மானியமாக அரசால் வழங்கப்படும்” என்ற நல்ல அறிவிப்பை வெளியிட்டார். இதற்காக விண்ண ப்பித்த 840 கடைகள் உள்பட கூட்டுறவு கடைகளையும் சேர்த்து ஆயிரம் மருந்தகங்களை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற 24-ந்தேதி திறந்து வைக்கிறார்.

முதல்வர் மருந்தகங்களில் விற்கப்படும் ஜெனரிக் மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தால் கொள்முதல் செய்யப்படும். இதுதவிர மருத்துவம் சார்ந்த இதர உபகரணங்கள், சித்தா, ஆயுர்வேதம், இம்ப்காப்ஸ் மற்றும் யுனானி மருந்துகள் உள்பட மற்ற மருந்துகள் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் கொள்முதல் செய்யப்பட்டு, வழங்கப்பட உள்ளது.

மத்திய அரசாங்கத்தின் மலிவு விலை மருந்தகத்துக்கும், முதல்வர் மருந்தகத்துக்கும் என்ன வித்தியாசம்? என்று ஒரு தமிழக அரசு அதிகாரியிடம் கேட்டபோது, “முதல்வர் மருந்தகங்களில் 200 வகையான ஜெனரிக் மருந்துகள், பிராண்டட் மருந்துகள் கிடைக்கும். மத்திய அரசின் மருந்தகங்களை விட, முதல்வர் மருந்தகங்களில் மருந்துகளின் விலை 10 சதவீதம் குறைவாக இருக்கும். பிராண்டட் மருந்துகள் என்று கூறப்படும் கம்பெனி மருந்துகளின் விலையும் குறைவாக இருக்கும்” என்றார். இந்த கடைகள் ‘டி-பார்ம்’ அல்லது ‘பி-பார்ம்’ படித்தவர்களின் கடைகளாகவோ அல்லது அவர்கள் வேலைபார்க்கும் கடைகளாகவோ இருக்கும். டாக்டர்கள் எழுதிக்கொடுக்கும் மருந்துகளுக்கு சிறந்த மாற்று மருந்துகள் எது? என்பது அவர்களுக்கு தெரியும். மருந்து வாங்க வருபவர்களிடம் அந்த மருந்துகளை எப்படி? எப்போது சாப்பிட வேண்டும்? என்ற ஆலோசனைகளையும் கூறுவார்கள். தரத்தில் குறை இல்லாமல், குறைந்த விலையில் மருந்துகளை விற்கும் முதல்வர் மருந்தகங்கள் பரவலாக கிராமங்கள் உள்பட அனைத்து இடங்களிலும் திறக்கப்படுவது மக்களுக்கு நிச்சயமாக நல்ல பலனை அளிக்கும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது.



தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர், மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாடுவதையொட்டி, தி.மு.க. தொண்டர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், மாநில தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. மாநில தொண்டர் அணித் தலைவர் ஜி.சுகுமாரன், மாநில தொண்டர் அணி துணைச் செயலாளர்கள் ஆவின் எம்.ஆறுமுகம், புதுக்கோட்டை சுப.சரவணன், பி.எம்.முனிவேல், எஸ்.எம்.கே.அண்ணாதுரை, மாநில தொண்டர் அணிப் பயிற்சியாளர் மாஸ்டர் இ.குருதாஸ் ஆகியோர் பங்கேற்றனர். கழகத் தலைவர் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டந்தோறும் விளையாட்டுப் போட்டிகளும், நலத்திட்ட உதவிகள் வழங்குவது, ஒலிம்பிக் விளையாட்டின் உள்ள “தேக்வாண்டோ” தற்காப்புக்கலை போட்டியினை மாபெரும் அளவில் நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

# புதுச்சேரி வக்பு வாரியத்திற்கு தலைவரை நியமித்து செயல்படுத்த வேண்டும்!

## தி.மு.க. சிறுபான்மையினர் கூட்டத்தில் வலியுறுத்தல் !

*புதுச்சேரி, பிப். 23 -*

புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழக சிறுபான்மை அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் லப்போர்த் வீதியில் உள்ள தி.மு.க. தலைமை அலுவலகத்தில் நடந்தது.

கூட்டத்திற்கு சிறுபான்மை அணி அமைப்பாளர் முஹம்மது ஹாலித் தலைமை வகித்தார்.

இதில் தி.மு.க. மாநில அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார்.

கூட்டத்தில், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த மார்ச் 1-ஆம் தேதி சுல்தான்பேட்டை அரசுப் பள்ளியில் பயிலும் 200 மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல், புதுச்சேரி அரசு வேலைவாய்ப்புகளில் இஸ்லாமியர்களுக்கான இடஒதுக்கீடு 2 சதவீதம் தொடர்ந்து புறக்கணிப்பதை இக்கூட்டம் கண்டிப்பது, ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வந்துள்ள வக்பு திருத்த மசோதாவை கண்டிப்பது, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சிறுபான்மையின மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகையை மீண்டும் வழங்க ஒன்றிய அரசை வலியுறுத்துவது, புதுச்சேரி வக்பு வாரியத்திற்கு தலைவரை நியமித்து வாரியம் சிறப்பாக செயல்பட புதுச்சேரி அரசை இக்கூட்டம் வலியுறுத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில், தொகுதி செயலாளர் சக்திவேல், வர்த்தகர் அணி துணைத் தலைவர் குரு (எ) சண்முகசுந்தரம், மாநில சிறுபான்மை அணி துணை அமைப்பாளர்கள் ஐசக் நேசமணி, முகம்மது இஸ்மாயில், நாகூர் மீரான், ஷேக், முகம்மது இஸ்மாயில் பாஷா, சையது அபுதாஹிர், மரிய ஜோசப் திவி, ராஜ் முகம்மது ஆகியோர் கலந்து கொண்டனர்.



புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழக சிறுபான்மை அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் லப்போர்த் வீதியில் உள்ள தி.மு.க. தலைமை அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்திற்கு சிறுபான்மை அணி அமைப்பாளர் முஹம்மது ஹாலித் தலைமை வகித்தார். இதில் தி.மு.க. மாநில அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## தஞ்சை எஸ். நடராசன்

### பிப்ரவரி 23 (1984)



**சோழ மண்டலத்தின் தலைநகராம் தஞ்சையில் கழகம் வளர்த்த தீரர். அய்யா – அண்ணா நெறிகளை வாழ்க்கை நெறியாகக் கொண்டு உழைத்த சுயமரியாதைச் சுடர். சோதனைக் காலங்களிலும் கலைஞர் தலைமையில் ஏறுநடை போட்ட தோழர்.**

**தஞ்சை நகரச் செயலாளராக தொடர்ந்து 25 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றியவர். தமிழக சட்டமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்.**

**தஞ்சை நகராட்சி உறுப்பினர், தஞ்சை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் ஆகிய பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றியவர்.**

**மிசா கொடுமையையும் தாங்கியவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**“சிதம்பரத்து நடராசர் நடனமாடுவதற்காக ஒற்றைக் காலில் நிற்கிறார். இவரும்தான் கொண்ட கொள்கையில் – எடுத்த காரியத்தை முடிப்பதில் ஒற்றைக் காலில் நிற்கக் கூடியவர்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழாரம் சூட்டப்பட்டவர்.**

## தலைமைக் கழகம்
## தி.மு.க.